C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

பொழிவு : 17 | MAY 2025 | ஆகாரம் : 05

## வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே!

நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு

## இளைப்பாறுதல் தருவேன்.

மத்தேயு 11:28



# UPCOMING EVENTS

**All Sun May '25** — Sunday
5:00 pm
**OUT REACH MINISTRY - CAMP**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**All Tue May '25** — Tuesday
7:30pm
**COTTAGE PRAYER**
Church Members House

**All Tue & Fri May '25** — Tue & Friday
5:00pm - 06:00pm
**TAMIL CLASS**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**All Wed May '25** — Wednesday
7:30pm
**BIBLE STUDY & PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**All Thu May'25** — Thursday
2:00pm - 5:00pm
**TAILORING CLASS**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**17 May '25** — Saturday
6:30pm - 09:30pm
**CONFIRMATION SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**24 May '25** — Saturday
09:00pm
**1CHRONICLES BIBLE TEST**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**24 May '25** — Saturday
7:30pm - 09:00pm
**EVENING SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**All Sat May '25** — Saturday
6:30pm - 7:30pm
**CHILDREN BIBLE SCHOOL**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**31 May '25** — Saturday
7:30pm - 09:30pm
**PRAISE &WORSHIP SERVICE**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

# From the Pastor's Desk



**அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள்.**

முந்தைய நாட்களில் மனிதர்கள் தங்கள் வாழ்க்கைத் தேவைகளை காடுகளிலும், மலைகளிலும் கிடைத்த கிழங்கு, தேன், மிருகங்கள், தாவரங்கள் எனக் கண்டெடுத்து அதனை உண்டு பொதுவுடமைச் சமூகமாக வாழ்ந்தனர், பகிர்தலின் சமூகமாக வாழ்ந்தனர். காலப்போக்கில் பின் நாட்களில் சமதளத்தில் மனக்குலம் வாழ ஆரம்பித்தபோது, பெண்கள் விதைகளைக் கண்டறிந்து வேளாண்மைச் செய்ய வழி வகுத்தனர். பிறகு பல மாற்றங்களுக்குப் பின் "நான்", "எனக்கு" என்ற சுயநலம் வலுத்தது. அதன் விளைவால் முதலாளி – தொழிலாளி என்கிற அவல நிலை உருவானது. அதிகப்படியான வேலை நேரம் தொழிலாளிக்கு பெரும் சுமையானது.Cஇது 18ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வேகமாக வளர்ச்சி அடைந்த நாடுகளில் தொழிலாளர்கள் நாள் ஒன்றுக்கு 12 மணி நேரம் முதல் முதல் 18 மணி நேரம் வரையில் கட்டாய வேலைக்கு உட்படுத்தப்பட்டனர். இதனை எதிர்த்து 1886 இல் அமெரிக்காவின் சிகாகோவில் தொழிலாளர்கள் கடுமையாகப் போராடினர், இதில் அநேகர் தங்கள் உயிரையும் இழந்தனர். இதன் விளைவு தொழிலாளர்கள் 8 மணி நேரம் வேலை,8 மணி நேரம் ஓய்வு, 8 மணி நேரம் உறக்கம் என்ற உரிமையைப் பெற்றனர். 1891ஆம் ஆண்டு மே முதல் தேதியில் இருந்து அகில உலக தொழிலாளர் தினம் என அறிவிக்கப்பட்டது. இந்த மே மாதத்தில் ஆண்டவர் நம்மை அழைப்பது உழைக்கவும், ஓய்ந்திருக்கவும், அவரின் வழியில் வாழவுமே. இதனைத் திருமறையில் "ஆறு நாளும் நீ வேலை செய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம் நாள் உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வு நாள்" (யாத் 20:9,10) ஓய்வு நாளிலே ஓய்ந்திருங்கள் என்றும் ஆண்டவரைத் தொழுது கொள்ளுங்கள் என்றும் கடவுள் தெளிவுபடுத்துகிறார்.

## ஆண்டவர் அழைக்கிறார்:

"வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிற வர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்" (மத்தேயு 11:28) என்று ஆண்டவர் இயேசு நம்மை அழைக்கிறார். குறைகள் பலவற்றுடன் சோர்ந்து, வாழ்வு கசந்து, பலவிதமான நெருக்கத்தோடு வாழும் ஒவ்வொருவரையும் இயேசு கிறிஸ்து தமது காயப்பட்ட கரங்களை நீட்டி அழைக்கிறார். அவரிடத்தில் சேரும்போது வாழ்வில் நிறைவைத் தருகிறார்.

## இளைப்பாறுதல் தருகிறார்:

ஆண்டவர் இயேசுவிடம் தஞ்சம் அடையும்போது அமைதலான வாழ்வும், நிறைவான இளைப்பாறுதலையும் தருகிறார். (மத்தேயு 11:28) கவலைகள், கஷ்டங்கள் அனைத்தும் மாறும்

கண்ணீர் துடைக்கப்படும். ஆண்டவர் இயேசுவின் கரங்கள் என்றைக்கும் அரவணைக்கும் கரங்களே ஆகும்.

**கற்றுக் கொடுப்பவர்:**

ஆண்டவர் இயேசு தாழ்மையாய் வாழ்ந்தார், சிலுவையின் மரண பரியந்தம் தாழ்மையாகவே வாழ்ந்தார். என்னிடத்தில் தாழ்மையைக் கற்றுக் கொள்ளுங்கள்

"அப்பொழுது, உங்கள் ஆத்மாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" (மத்—11:29) ஆண்டவரிடம் சேரும்போது,நமது சுமைகளை அகற்றி விடுகிறார்.அவரது வழியில் தாழ்மையாக வாழும் போது அமைதி நிறைந்த வாழ்வைத் தருகிறார்.

**நிறைவாக**

ஆண்டவரின் திருவார்த்தை என்னும் வசனம் நல்ல நிலத்தில் விழுந்தவைகளாய் நம் மனத்துள் விழுந்து,அவை ஓங்கி வளர்ந்து முப்பதும் அறுபதும் நூறுமாக பலன் தந்திட (மாற்கு 4:8) நம்மை அர்ப்பணிப்போம். "கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன்" (மாற்கு 4:9) என்று ஆண்டவர் இயேசு அறைகூவல் விடுக்கிறார்.

ஆண்டவரின் திருவார்த்தைகளை தியானிப்போம், அதன்வழி வாழ்வோம்,மிகுந்த பலன் தருவோம், ஆண்டவர் இயேசு தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,

ஆயர்.

Rev. S.Baktha Thiyagarajan

## மன்னா ஏப்ரல் - 25 மீள் பார்வை...



ஆண்டவர் இயேசுவுக்கே மகிமை.கடந்த ஏப்ரல் 25 மன்னாவை குறித்த ஒரு பார்வை. பக்கம்-3ல் சிலுவையோடு காத்தி-ருப்பாயா? என்ற தலைப்பில் சிலுவையில் ஆண்டவர் உள்ளார்ந்த மன வேதனையை அறிந்து நாம் சரியாக வாழ வேண்டும் என்றும், பக்கம் 4-ல் செயலர் மடலில் கடந்த மாத திருச்சபை நிகழ்வுகளுடன், நமது வாழ்க்கை தூய வாழ்வாக இருந்திட வேண்டும் என்றும், பக்கம் 6-ல் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து நம்முடன் வாழ்பவர்,நம்மை நிறைவுடன் வாழச் செய்பவர் என்பதனையும், பக்கம் 8-ல் உயிர்த்தெழுதலும் முதற்பலனுமான இயேசு கிறிஸ்து மரணம் முடிவு அல்ல,அது வெற்றியான விண்ணக வாழ்வை அடைவதே.எனவே இயேசுவின் வழி வாழ்வோம் என்றும்,பக்கம் 10-ல் சிம்சோனின் வீழ்ச்சிக்கு காரணம் கர்த்தரை விட்டு பாவத்திற்கு இடமளித்ததே. எனவே ஆண்டவரை துக்கப்படுத்தாது, பாவத்திற்கு செத்து நீதியாக வாழ வேண்டும் என்றும், பக்கம் 11-ல் எளியவர்க்கு செய்யும் பணி இறைவனுக்கே செய்யும் திருப்பணி எளியோருக்கான திருப்பணியில் நம்மை இணைத்துக் கொள்வோம் என்றும்,பக்கம் 12-ல் DIVINE WONDERS தலைப்பில் கடவுளின் வல்ல செயல்கள் அளவிட முடியாதவை.அவை தொடர்பவை நாம் தொடர்ந்து ஜெபிப்போம். ஆண்டவர் தாமே அனைத்து நேரத்திலும் நம்மை அதிசயமாய் வழிநடத்துபவர் என்றும்,பக்கம் 13-ல் இயேசுவின் சீடர் யூதா ததேயு வாழ்வின் சுருக்கம் சிறப்பானது. அவரின் அர்ப்பணிப்பும் துணிவும் நிறைந்த வாழ்வு நமக்கான சவால் என்றும்,

பக்கம் 15-ல் சிலுவை சுமக்கும் அனுபவம் என்பது பிறரை குற்றம் சாட்டுவது அல்ல, மாறாக அன்புடன் பொறுமையாக வாழ்வதே என்றும், பக்கம் 16-ல் நமது சிறிய கண்ணீர், ஜெபம்,அமைதி என்று,நமக்கான தடைகளின் ஊடே கடவுளை நம்ப வேண்டும். அப்போது 2 மாத குழந்தைக்கு உயிர் தந்த கடவுள் நமக்கும் உறுதியாக பதில் அளிப்பார் என்றும், சிறு பிள்ளைகளின் புதிர்களுக்கான பதில்கள்,சிறு பிள்ளைகளின் கைவண்ணங்கள், அனைத்தும் சிறப்பே.திருமறை பகுதிக்கான விடைகள் எழுதியிருப்போர், சிறு பிள்ளைகளின் திருமறை புதிர்கள், மன்னாவுக்கான ARTICLE அனுப்பின அனைவருக்கும் உளமார்ந்த வாழ்த்துக்கள், கடவுள் ஆசிர்வதிப்பாராக.

**இறைப்பணியில்,**
**ஆயர்.**




ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

ஒரு நாள் தாமஸ் ஆல்வா எடிசனின் ஆய்வுக்கூடத்தை அவரின் வளர்ச்சியைக் காண பொறுக்காத சிலர் தீக்கொளுத்தி விட்டனர்.அதைக் கண்ட அவர் மனம் உடைந்து,எறிந்த ஆய்வகத்தை சுற்றிப் பார்த்தார். அனைத்தும் கருகி சாம்பலாகி இருந்த நிலையில், ஒரு கட்டுப்போட்ட பன்டலை பார்த்தார். அதில் அவருடைய போட்டோ தவிர அனைத்தும் எரிந்து இருந்தது. அப்போது அந்த போட்டோவின் பின்புறத்தில் ஒரு கரிக்கட்டையை எடுத்து, "இந்தத் தீயால் இந்த போட்டோவையே ஒன்றும் செய்ய முடியவில்லை,உன் திறமையை யாராலும் பறிக்க முடியாது; ஏனெனில் இயேசு உன்னுடன் இருக்கிறார்" என்று எழுதினார். பின்பு தன் ஆய்வை ஆண்டவர் இயேசுவின் உதவியோடு, மீண்டும் விடா முயற்சியோடு தொடங்கினார், தொடர்ந்தார். அதன் விளைவே உலகமே பயன் பெறும் அவரின் கண்டுபிடிப்புகள் ஏராளம்.

திருமறையில், லூக்கா 18:1—8 வரையில் உள்ள பகுதியில் ஆண்டவர் இயேசு ஒரு உவமையைக் கூறினார்.ஒரு பட்டணத்தில் கடவுளுக்கு பயப்படாத ஒரு நியாயாதிபதி இருந்தார்.அந்தப் பட்டணத்தில் தன் பிரச்சனைக்கு நியாயம் வேண்டி ஒரு விதவைப் பெண் அந்த நியாயாதிபதியிடம் சென்று தனக்கு நியாயம் செய்யும்படி அவரிடம் வேண்டினாள். ஆனால் அவரோ அவளின் பிரச்சனையை குறித்து கண்டு கொள்ளவில்லை, அவளுக்கான நீதி கிடைக்கவில்லை.

அவள் தனக்கு நியாயம் செய்யாத நியாயாதிபதி மீது கோபப்படவில்லை, எரிச்சலும் அடையவில்லை. மாறாக அவள் மீண்டும் மீண்டும் நியாயாதிபதியிடம் வந்து தனக்கான நியாயம் விசாரிக்கும்படி வேண்டிக் கொண்டாள்.

அந்த நியாயாதிபதியோ இந்த விதவை எப்போதும் தொந்தரவு செய்கிறாளே,நான் கடவுளுக்கு பயப்படாமலும், மனிதரை மதியாமலும், இருந்தும் தொடர்ந்து வந்து என்னிடம் நியாயம் கேட்கிறாளே இவள் அடிக்கடி வந்து என்னை

அலட்டாதபடிக்கு இவளுக்கு நியாயம் செய்ய வேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

விடாமுயற்சியுடன் வந்த அந்தப் பெண்ணுக்கு தீர்ப்பு கிடைத்தது. இந்த உவமையில் சொல்லப்பட்டுள்ள அநீதியுள்ள நியாயாதிபதி விதவையின் இடைவிடாத வேண்டுதலைக் கேட்டு தீர்ப்பளித்தான்.

நாம் நீதியுள்ள நியாயாதிபதியாகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் எப்படி வேண்டுதல் செய்கின்றோம், என்பதை சிந்தித்துப் பார்ப்போம்.நம் ஜெபத்திற்கான பதில் எதிர்பார்க்கிற நேரத்தில் கிடைக்கவில்லை என்றால் சோர்ந்து போகிறோமா? தூய பவுல் அடிகளார் 1தெச 5:17—ல், "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" என்று கூறுகிறார். எனவே நாம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம் விடாமுயற்சியோடு, நம்பிக்கையோடு, உறுதியான மனத்துடன் ஜெபம் செய்வோம்,ஜெயம் பெறுவோம். ஜெபமே வாழ்வாகட்டும், ஜெபம் வெற்றியைக் கொண்டு வரும். கிறிஸ்தவர் ஒவ்வொருவரின் வாழ்விற்கும் இதுவே சட்டம், ஆமென்.

இறைப்பணியில்,
ஆயரம்மா

*Mrs .P.Velanganni*



# செயலர் மடல்



கிறிஸ்துவுக்குள் பிரியமான திருச்சபை மக்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள் கிறிஸ்துவின் மகா பெரிய கிருபையினால் அனுதினமும் நம்மை காத்து வழிநடத்தி வருகிற தேவாதி தேவனுக்கு கர்த்தாதி கர்த்தருக்கு புகழும், கீர்த்தியும், மகிமையும் உண்டாவதாக. கர்த்தரின் பெரிதான கிருபையினால் கடந்த மாதம், 40 நாள் லெந்து கால அனுதினமும் ஆண்டவரோடு தியான நேரத்தை கொடுத்ததற்காக நன்றி செலுத்தவும், புனித வெள்ளி மற்றும் ஈஸ்டர் பண்டிகையை கொண்டாட கர்த்தர் பெரிதான கிருபை செய்தார். அதேபோல் வருடாந்திர செயற்குழு கூடுகையும் சிறப்பாக நடந்ததற்காக கடவுளை மகிமைப்படுத்துவோம். தொடர்ந்து நம்முடைய திருச்சபைக்காக ஜெபித்துக் கொள்ள வேண்டிக்கொள்கிறேன் திருச்சபையில் அன்றாடம் நடைபெறும் ஊழியங்களுக்காகவும், ஒவ்வொரு திருச்சபை குடும்பங்களுக்காகவும் அங்கத்தினர்களுக்காகவும் ஜெபிக்கும்படி

தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக அவுட்ரீச் மினிஸ்ட்ரிக்காக பங்குபெறும் 15 ஆத்மாக்களுக்காகவும் ஜெபிக்க வேண்டிக்கொள்கிறேன். அவர்கள் வசனத்தை ஏற்றுக் கொண்டு அதை தங்கள் வாழ்விலே பயன்படுத்த கர்த்தர் கிருபை செய்வாராக

| | |
|---|---|
| 1.தங்கராசு | 2. ஏழுமலை |
| 3. ஏழுமலை | 4.மூர்த்தி |
| 5. மணிகண்டன் | 6. முத்துகிருஷ்ணன் |
| 7. முத்துக்கண்ணன் | 8. செல்வி&மூர்த்தி |
| 9.சசி | 10. வெங்கடேஷ் |
| 11. தங்கசாமி | 12.தரணி |
| 13. ராஜவேல் | 14.மாரிமுத்து |
| 15. வேலு | |

இவர்களுக்காக ஜெபித்து கொள்ளுங்கள் உங்கள் சிந்தனைக்காக, தேவ பிள்ளைகள் வாழ்க்கையில் நடந்த காலதாமதங்கள்:

## 1. ஈசாக்கு பிறப்பதற்கு ஏற்பட்ட காதாமதம்

ஆபிரகாம் முதிர் வயதாயிருக்கையில் சாராள் கர்ப்பவதியாகி, தேவன் குறிந்திருந்த காலத்திலே அவனுக்கு ஒரு குமாரனை பெற்றாள் (ஆதி 21:1,2) ஆபிரகாமுக்கு 75 வயதில் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் 25 ஆண்டுகள் கழித்து நிறைவேறியது. ஆபிரகாமின் வாழ்க்கையில் ஏன் ஆண்டவர் 25 ஆண்டுகள் காலதாமதம் செய்தார். இந்த 25 ஆண்டு கால இடைவெளியில் ஆபிரகாமும், சாராரளும் ஆண்டவரது வாக்குத்தத்ததை நம்புவதில் சற்று தடுமாற்றம் அடைகிறார்கள்.

நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்தி—ரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி. பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார் (ஆதி 15:5) இது தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தம். இந்த வாக்குத்தத்தம் நிறைவேற ஆபிரகாம் 25 ஆண்டுகள் காத்திருந்தான்.

அருமையான தேவ பிள்ளையே! நீ பொறுமையுடன் காத்திரு. சொன்னதை அவர் நிச்சயம் நிறைவேற்றுவார். "பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல, மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல, அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?" (எண் 23—19)

## 2. அன்னாளுக்கு சாமுவேல் பிறப்பதற்கு ஏற்பட்ட காலதாமதம் (1சாமு 1–19)

தனக்கு குழந்தை இல்லை என்ற ஏக்கம் அன்னாளை வாட்டியது. அவள் கர்ப்பத்தை கர்த்தர் அடைத்தார் (1 சாமு 1:5) என்று வேதத்தில் வாசிக்கிறே

## 3) நோவாவின் பேழை தரைமட்டத்திற்கு வர ஏற்பட்ட காலதாமதம்

"தேவன் நோவாவையும், சகல மிருகங்களையும் நினைத்தருளினார். தேவ பூமியின் மேல் காற்றை வீசப் பண்ணினார். அப்பொழுது ஜலம் அமர்ந்தது. அப்பொழுது நோவாவும், அவன் மனைவியும், அவன் குமாரரும், அவர்கள மனைவிகளும் பேழையிலிருந்து இறங்கி வந்தார்கள் (ஆதி 8:1,18). நோவாவும் அவனது குடும்பத்தினரும், பேழையிலிருந்த உயிரினங்களும் தரையில் இறங்க ஏறக்குறைய 190 நாட்கள் காத்திருந்தார்கள். அது போலனே நீயும் நானும் ஆண்டவருடைய வேளைக்காக காத்திருப்போம்.

## 4) யோசேப்பின் கனவு நிறைவேறுவதில் கால தாமதம்

யோசேப்பின் சகோதரர்கள் அவனுக்கு முன்பு வந்து முகங்குப்புற தரையில் விழுந்து அவனை வணங்கினார்கள். யோசேப்பு தன் சகோதரர்களை குறித்து தான் கண்ட சொப்பனங்களை நினைத்தான் (ஆதி 42:6,9). யோசேப்பின் கனவு 21 ஆண்டுகளுக்கு பின்புதான் நிறைவேறியது.

## 5) தாவீது இராஜாவாக ஏற்பட்ட காலதாமதம்

"என் தேவனுக்காக நான் காத்து, காத்து என் கண்களும் பூத்துப் போயிற்று (சங் 69:1—3) தாவீதை போலவே ஆண்டவர் உன்னையும் உயர்த்துவார்.

இதை வாசிக்கிற தேவ ஜனமே தெய்விகத் தாமதங்கள் உங்களது வாழ்க்கையில் இருக்குமானால் நீங்கள் கலங்கிட வேண்டாம்.

"என் வேளை இன்னும் வரவில்லை என்றார்" (யோ 2:4)

"நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும்: விரும்பினது வரும்போதோ ஜீவவிருட்சம்போல் இருக்கும்" (நீதிமொ 13:12)

"ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (1 பேதுரு 5:6)

இறைப் பணியில்

MR. SANTHOSH KUMAR

திருச்சபைச் செயலர்



# இயேசு

## நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்

தேவன் நம்மை பார்த்து பரிசுத்தராக இருங்கள் என்று சொல்கிறார். சிலர் நாம் பரிசுத்தமாக வாழ முடியாது என்கிறார்கள்.!! அது நீ இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்தோடும் சொல்லவேண்டியது என்னவென்றால்: உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள். லேவியராகமம் 19—2 இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! 2 பேதுரு 3—11 மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள். எபேசியர் 4—24 யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே. எபிரேயர் 12—14 நாம் பரிசுத்தமாக வாழ்வதற்கு தான் பரிசுத்த ஆவியை தேவன் கொடுத்திருக்கிறார். அவரே சகல சத்தியத்துக்குள் நம்மை நடத்துவார். பரிசுத்த ஆவியானவரின் பெலத்தினால் நிச்சயமாக பரிசுத்தமாக வாழ முடியும். அநேகர் பரிசுத்தமாக வாழ்ந்தார்கள். இன்றைக்கும் வாழ்கிறார்கள், அதற்காக நம்மை பரிசுத்தமானவர்கள் என்று மேன்மை பாராட்ட அவசியமில்லை. ஆண்டவர் மனிதனால் செய்ய முடியாததை செய் என்று ஒருகாலும் சொல்லமாட்டார், அவருடைய சத்துவத்திலும் வல்லமையிலும் பெலப்படும் போது இந்த உலகத்தின் எந்த இச்சைகளையும் மேற்கொள்ளமுடியும், அவருடைய ஆவியினாலே உள்ளான மனிதனில் பெலப்படுகிறவர்கள் எந்த சூழ்நிலையிலும் தங்கள் சாட்சியை காத்து கொள்வார்கள். இயேசுவை தன் மணவாளனாக முழு இருதயத்தோடு நேசிக்கிறவர்கள் தங்களை பரிசுத்தமாக காத்து கொள்வார்கள். பரிசுத்தவான்கள் ராஜ்ஜியத்தில் பங்கடையும் படி நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம், அசுத்த—மானவர்கள் அதில் பங்கடைவதில்லை. பிதாவை போல பூரண சற்குணராக மாறுங்கள் என்று இயேசு சொன்னார். மனிதனால் கூடாது, தேவனால் கூடும் என்றார் என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு.தேவன் ஒருவரே பரிசுத்தர். உண்மை

தான். அதற்காக நம்மால் இந்த உலகத்தில் பரிசுத்தமாக வாழ முடியாது என்று மறைமுகமாக பேசுகிறவர்கள் உலகத்துக்கு ஒத்த வேஷம் தரிக்கிறார்கள். இவர்கள் தங்கள் வேத அறிவை கொண்டு பேசுகிறார்கள்.நமக்கு தேவை பரிசுத்தாவியினால் அருளப்படும் தேவ ஞானம் மற்றும் வேத ஞானம். மேலும் ஜீவனுக்கு போகும் வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதை கண்டுபிடிக்கிறவர்கள் சிலர். கள்ள போதகர்களுக்கு எச்சரிக்கையாக இருங்கள் அழகாக சத்தியத்தை பேசுவார்கள். ஒரு கப் பாலில் ஒரு துளி விஷம் இருப்பதை கண்டுபிடிக்கமுடியாததை போல தவறான போதகத்தை அழகாக திணித்துவிடுவார்கள். இந்த உலகத்தில் பரிசுத்தமாக வாழ கிருபையை கேளுங்கள். அதற்க்கு மாறாக கடைசி நேரத்தில் கிருபையினால் உங்களை பரலோகத்துக்கு கொண்டு போவார் என்று நினைத்து கொண்டு உங்களை வஞ்சிக்காதீர்கள். அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும், அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும், நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும், பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். இதோ, சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது. வெளிப்படுத்தின விசேஷம் 22:11,12) நம்முடைய எண்ணங்கள் கூட நியாந்தீர்க்கப்படும் காலம் வருகிறது என்று வேதம் சொல்கிறது. அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன், இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. ரோமர் 12:1 மனிதர்களின் இருதயத்தின் நினைவுகளின் தோற்றங்கள் பொல்லாதவைகளாக இருந்ததினால் தேவன் மனிதனை படைத்ததற்காக மனஸ்தாபப்பட்டார். (ஆதி 6—5,6) எனவே தேவன் விரும்பும் பரிசுத்தம் நம் வாழ்க்கையில் காணப்பட வேண்டும்.இருதயத்தில் சுத்தமுள்ளவர்களே தேவனை தரிசிப்பார்கள் என்று இயேசு சொன்ன வார்த்தைகளை குறித்து எச்சரிக்கையாக இருப்போம். (யாத் 19—6) ல் நீங்கள் எனக்கு பரிசுத்த ஜாதியாக இருப்பீர்கள் என்று தேவன் சொல்கிறார். நாம் நம்முடைய வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் பரிசுத்தமாக வாழ்கிறோமா என்று நிதானித்து அறிவோம்.எனவே நம் பரிசுத்தத்தை காத்து கொள்வோம்.நாம் பரிசுத்தமாக வாழும் படி நம்மை ஒப்பு கொடுப்போம். ஆமென்

Article by

**MR. ASHOK KUMAR**

Men's Fellowship




**Ephesians 6:12 - New International Version**

[12] For our struggle is not against flesh and blood,

Do you know your real enemy?

Are you fighting with the right enemy?

Are there any conflicts among the believers, Church?

Do you know that as believers, we do face trials in this world. Look at what Jesus says in:

**John 16:33 - New International Version**

[33] "I have told you these things, so that in me you may have peace. In this world you will have trouble. But take heart! I have overcome the world."

So, here are some tips to enjoy a peaceful Christian life in this world overcoming our enemy's schemes and strategies:

1. **Know & fight the real enemy:** We are living as aliens in this world and the world will not recognize us, as part of its community. We are of a different kingdom – the Kingdom of God. We encounter spiritual warfare as we do belong to the Kingdom of God. The invisible and intangible war between the Kingdom of God and the kingdom of Satan involves us too. He brings trials and tribulations into every believer's life. Since time eternal – the devil is a liar and father of all lies, he is a schemer, accuser of brothers/sisters before God (Book of Job) (in the book of Job, God teaches through Job that the words of his friends even though it was hurtful, are from the scheme of the Satan and that Job's real enemy was Satan, as shown in that poetry narrative of the book of Job. Job was a righteous person and when God sent his friends to offer sacrifice and pray for them – he willingly did so, and the bible says – that God saw Job's face). God is today calling us too, to know our real enemy, who is waging war against us as believers of Jesus Christ. If your fellow believers or office colleague or father, mother or children are raising against you, this is the scheme of great serpent Satan. Satan comes to steal, kill and destroy, the bible says.
   Now read the Bible verse quoted from **Ephesians 6:12** fully - For our struggle is **not against flesh and blood**, **but against the rulers, against the authorities, against the powers of this dark world and against the spiritual forces of evil in the heavenly realms**. So, our real enemies are the agents of the kingdom of Satan – Satan, his angels, the demons and everyone who is of this dark spiritual world.
2. **Be Alert: 1 Peter 5:8-9** Be alert and of sober mind. Your enemy the devil prowls around like a roaring lion looking for someone to devour. [9] Resist him, standing firm in the faith, because you know that the family of believers throughout the world is undergoing the same kind of sufferings.

The Bible verse from **James 4:7** states this way- **Submit yourselves, then, to God. Resist the devil, and he will flee from you.**

**Are we Prone to Evil Attacks & knowing that we are lost in the Battle, thrown ourselves away from the presence of God and lost connection in prayers & communications** – Satan is a schemer and a deceiver. He always attacks the weak and powerless people. He uses our weak points, our temptations such as lust, our weak emotions such as anger etc. and our weak bond in relationship with our spouse, children and friends. But the bible confirms that even at those weak moments and when temptations are about to take control of ourselves, we still have a solution, confidence and strength through our faith in Jesus Christ.

This is as per the bible verse in **1 Corinthians 10:13 - No temptation has overtaken you except what is common to mankind. And God is faithful; he will not let you be tempted beyond what you can bear. But when you are tempted, he will also provide a way out so that you can endure it.**

The bible verse **James 4:8 says, "Draw nigh to God, and he will draw nigh to you."** The only way that we tend to be strong is through our closeness with our Lord Jesus Christ. He promised that His Holy Spirit will lead us through in this world. He will enable us to pray even when we feel that we are betrayed, defeated and thrown back from faith and trust. It is His promise that the Holy Spirit Himself will enable us to pray as promised in **Romans Chapter 5 (KJV):**

26 Likewise the Spirit also helpeth our infirmities: for we know not what we should pray for as we ought: but the Spirit itself maketh intercession for us with groanings which cannot be uttered. 27 And he that searcheth the hearts knoweth what is the mind of the Spirit, because he maketh intercession for the saints according to the will of God. 28 And we know that all things work together for good to them that love God, to them who are the called according to His purpose.

**Put on the Armour of God:**

**The Armor of God:** Practice this Everyday

13 Therefore put on the full armor of God, so that when the day of evil comes, you may be able to stand your ground, and after you have done everything, to stand. 14 Stand firm then, with the belt of truth buckled around your waist, with the breastplate of righteousness in place, 15 and with your feet fitted with the readiness that comes from the gospel of peace. 16 In addition to all this, take up the shield of faith, with which you can extinguish all the flaming arrows of the evil one. 17 Take the helmet of salvation and the sword of the Spirit, which is the word of God. 18 And pray in the Spirit on all occasions with all kinds of prayers and requests. With this in mind, be alert and always keep on praying for all the Lord's people.

**Conclusion & Calling**: I have been in those situations, many times, and I have overcome those situations and I continue to press on with the help of the Holy Spirit in me. As my fellow believers – my brother and sisters, I wish to share my experiences with you and how in those grave moments – I was helped and being helped by the Spirit of God to stand firm and to stand up once again in Faith and run the race patiently that is set before me.

The psalmist's words from **Psalm 119:105-Thy word is a lamp unto my feet, and a light unto my path** and the enabling help of the Holy Spirit is strengthening me thus far to stand on the level ground and walk through faith in Jesus Christ every day.

May God's Name Be Glorified! May God Bless us all!
May we all be filled with the Spirit of God to lead us all throughout the days we live on this Earth!

Article by

**MRS.SHALOM SHANTHI**

Womens's Fellowship



# பொறுமையாயிருங்கள்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கிறிஸ்துவின் அலங்காரமான கிரீடம் பொறுமை. நம் வேதத்தில் ஆவியின் கனிகளில் ஒன்றாக பொறுமை காணப்படுகிறது. நம் வாழ்வில் பொறுமை முக்கியமானதாகும். நாம் செயல்படுகின்ற ஒவ்வொரு நேரத்திலும் பொறுமையாக இருந்தால் கண்டிப்பாக நாம் வெற்றியைக் காண முடியும்.

**இயேசு:**

நாம் பொறுமைக்கு உதாரணமாக எவரையும் நினைக்க வேண்டாம், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து விடமே பொறுமையைக் கற்றுக் கொள்வோம்,ஆம் பிரியமானவர்களே அவர் பொறுமையாக சிலுவையின் பாடுகளை சகித்தார், அவமானங்களை ஏற்றார்.அவர் நினைத்திருந்தால் எதையும் செய்திருக்கலாம், ஆனாலும் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து 2பேதுரு3:9—ல் உள்ளபடி நீடிய பொறுமை உள்ளவராய் இருந்தார்.

**ஆபிரகாம்:**

நம் வேதத்தில் ஆபிரகாம் பற்றி ஆதியாகமத்தில் படிக்கின்றோம் எபிரேயர் 6:15—ல் உள்ளபடி அவர் பொறுமையுடன் காத்திருந்து வாக்கு தத்தம் செய்யப்பட்டதைப் பெற்றார் என்று காண்கிறோம். ஆபிரகாம் கடவுளின் வாக்குத்தத்தத்திற்கு பொறுமையாக இருந்து,வெற்றி கண்டார்.நாமும் ஆபிரகாமின் பிள்ளைகளாக இருப்பதினால் நாமும் பொறுமையோடு காத்திருப்போம், வெற்றி பெறுவோம்.

**யோபு:**

யாக்கோபு 5:1—ல் இதோ பொறுமையாயி ருக்கிறவன் பாக்கியவான் என்றும், யோபின் பொறுமையை குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்கள் என்றும் வேதத்தில் வாசிக்கிறோம். ஆம் பிரியமானவர்களே, யோபுவைப் போல் நாம் பொறுமையாக இருக்கும் முடியுமா சிந்திப்போம். அனைத்தையும் இழந்தும் பொறுமையோடு இருந்தார். முடிவில் யோபுவின் முன்னிலமையைப் பார்க்கிலும் அவரின் பின் நிலைமை ஆசீர்வாதமாக மாறினது.

**தாவீது:**

சங்கீதம் 40:1—ல் கர்த்தருக்காக பொறுமையுடன் காத்திருந்தேன் என்று தாவீது சொல்லுகிறார். தாவீதும் தனது எல்லா காரியங்களிலும் கர்த்தர் சமூகத்தில் பொறுமையாக காத்திருந்து, அவருடைய தீர்மானங்களை பெற்றுக் கொண்டு எந்த ஒரு செயலிலும் ஈடுபட்டுள்ளார். அப்படி அவர் செய்த செயல்கள் அனைத்தும் வெற்றியாக மாறியது.

**உபத்திரவத்தில் பொறுமை:**

ரோமர் 12:12—ல், நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள், உபத்திரவத்தில் பொறுமையாயிருங்கள், ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள்.ஆம் பிரியமானவர்களே, உபத்திரத்தில் பொறுமையாயிருப்பது மிகவும் அவசியமானது. அப்படி பொறுமையாக செயல்பட்டால் கர்த்தர் எல்லா உபத்திரவத்திலும் நம்மை மீட்டு வெற்றியைக் கொடுப்பார். வெளி 3:10—ல் ஆண்டவர் கூறுவது, பொறுமையாக வசனத்தைக் காத்துக் கொண்டபடியினால் வரப்போகிற எல்லா சோதனை காலத்திற்கும் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்.

பிரியமானவர்களே, இன்னும் பொறுமையைக் குறித்து வேதத்தில் நிறைய இடம் குறிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் சில, பிரசங்கி7:8—ல் பெருமையுள்ளவனைப் பார்க்கிலும் பொறுமையுள்ளவன் உத்தமன் என்றும், 1தீமோத்தேயு 6:11—ல் அன்பையும் பொறுமையும் சாந்த குணத்தையும் அடையும்படி நாடு. லூக்கா 21:19—ல் பொறுமையினால் உங்கள் ஆத்மாவைக் காத்துக் கொள்ளுங்கள். இன்றைக்கு நாம் எப்படி இருக்கிறோம் என்று சிந்திப்போம், நம் வாழ்க்கைப் பயணத்தில் எல்லா செயல்களிலும் பொறுமையாக செயல்படுவோம். ஏனெனில், உபத்திரம் நமக்கு பொறுமையைக் கற்றுக் கொடுக்கும் என்று ரோமர் 5:3—ல் சொல்லப்பட்டுள்ளது.

ஆம் பிரியமானவர்களே, நாம் நமது எல்லா செயல்களிலும் பொறுமையாக இருந்து,ஆண்டவர் இயேசுவின் சமூகத்தில் ஜெபத்துடன் காத்திருந்து செயல்படுவோம், வெற்றி நிச்சயம் ஆமென்.

Article by

**MRS. JENIFER PAUL**

Youth Fellowship

# LONG -AWAITED




**"Hope deferred makes the heart sick, but a desire fulfilled is a tree of life"**
**Proverbs 13:12**

Almost everyone in this world is awaiting a blessing in their life.

When we started praying for it the energy was overflowing with complete faith.

At the end of year one, we became little tired and started questioning.

Year two, we got angry with him and lost hope.

Year three, coiling back to gain the faith in tears and still hoping.

Year four, somewhere at the back of our heart and mind the faith is still sticking on with all the doubts.

Year five, with a heavy heart amidst the pain and shame, with no strength, and no room for doubt or faith, still holding onto a ray of hope.

We could see people around us progressing with abundant blessings and living happily. But ME???? Seem to be struck in the same old square 1.

(IS THIS YOUR STATUS NOW???)

The world is abusing, wrapped in shame and the pain is unbearable.


Awaited a change, awaited a job, awaited a promotion, awaited a child, awaited financial soundness, awaited good health, awaited a happy family, etc......

DOES ALL THE DOORS SEEM TO BE SHUT FOREVER?

WAIT... LISTEN.... PRAISE.... PRAY.... BELIEVE.

If God can work a miracle for Abraham and Sarah after 25 years of the promise, He is our Almighty who can do the best for our lives too.

The promise period and the waiting period may be filled with tears, pain and shame but the blessing period is going to be overflowing with joy.




The wait may be long and draining but it's all for a purpose. So,

Stop Doubting.... Start Believing...

Stop Tearing.... Start Praising...

Stop Complaining.... Start Praying...

Stop Worrying.... Start Witnessing...

Faith as small as mustard seeds can move mountains. As humans it is completely normal to grow weary, but the WORD OF THE LORD is the only source of comfort and strength for us.

A heart melting song by Brenton Brown...

**Strength will rise as we wait upon the Lord**
We will wait upon the Lord
We will wait upon the Lord

**Our God, You reign forever**
Our hope, our Strong Deliverer
You are the everlasting God
The everlasting God
You do not faint
You won't grow weary

**You're the defender of the weak**
You comfort those in need
You lift us up on wings like eagles

**Strength will rise as we wait upon the Lord**



# APRIL WINNERS

## KIDS COLORING

- Iniyal Evangelin
- Smyrna Syntyche
- Hazel Hartlyn
- Jesil Bernice
- Shiphrah Shalom
- Johanna Jose

## WORD SEARCH


- Iniyal Evangelin
- Smyrna Syntyche
- Sherinsha
- Hazel Hartlyn
- Jesil Bernice
- Joshua Jose.


## FIND THE WAY


- Iniyan Immanuel
- Smyrna Syntyche
- Hazel Hartlyn
- Jesil Bernice
- Johanna Jose

## CROSS WORD

- Iniyan Immanuel
- Sherinsha






CHILDREN BIBLE SCHOOL

BEGINNER

ART

# 1CHRONICLES1-15

## நாளாகமம் 1–15

### MAY '25 - QUESTIONS

1. ஆதாத் மனைவி பெயர் என்ன?
2. சேசானுக்கு இருந்த வேலைக்காரன் யார்?
3. எருசலேமில் தாவீதின் அரசாட்சி காலம் எவ்வளவு?
4. பூர்வத்தில் செழிப்புள்ள இடத்தில் குடியிருந்தவர்கள் யார்?
5. ரூபன்,காத், மனாசேயின் பாதிக் கோத்திரத்தாரில் போர்சேவகர் எத்தனை பேர்?
6. அபிசுவா தந்தை யார்?
7. ஆடு மாடுகளை பிடிக்கப் போய் கொல்லப்பட்டவர்கள் யார்?
8. நேரின் பேரன் யார்?
9. ஆலய வாசல் காவலாளர்களை நியமித்தவர்கள் யார்?
10. சவுலின் தலையை வைத்த இடம் எது?
11. கெபிக்குள்ளே இறங்கிப் போய் ஒரு சிங்கத்தைக் கொன்றது யார்?
12. இஸ்ரவேலர் தாவீதோடு எத்தனை நாள் போஜனம் செய்தனர்?
13. எந்த களத்தருகே வருகிற போது மாடுகள் இடறினது?
14. பாகால் பிராசீம் என்னும் பேர் எப்படி வந்தது?
15. கீத வித்தையைக் கற்பித்தது யார்?

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 15ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

### ஏப்ரல்-2025 மாத வினாவிற்கான விடைகள்

1. 2இராஜா 14:25
2. 2இராஜா 15:16
3. 2இராஜா 16:11
4. 2இராஜா 17:28
5. 2இராஜா 18:26
6. 2இராஜா 19:20
7. 2இராஜா 20:20
8. 2இராஜா 21:13
9. 2இராஜா 22:14
10. 2இராஜா 23:13
11. 2இராஜா 24:20
12. 2இராஜா 25:12.

### ஏப்ரல்-2025 மாத வினாவிற்கான விடைகள் எழுதியவர்கள்

திருமதி.ஜெனிபர் பால்,
திருமதி.ஜோனிஸ் ஹெர்சல்,
திருமதி.ராதிகா செல்வக்குமார்,
திருமதி.ஹேமலதா ஸ்டீபன்,
திருமதி.பிப்ளின் நெல்சன்,
செல்வி.அஜின்ஷா,
திருமதி.ரேனா ஜோஸ்,
திருமதி.ரோஸ்மேரி,
திருமதி.ஜெயின் ராஜவேல்.

Name:

Date:

# Kids Coloring



Name : ..................................................

# OLD TESTAMENT BIBLE BOOKS

Fill in the Blanks in the Bible Book Names

G_n_s_s
Ex__u_
Lev___cu_
N__be__
De___ro__my
Jo___a
Ju__e_
__th
1 _a__e_
2 ___ue_
1 K__g_
2 ___gs
1 C_ro___les
2 C_ro___les
E___
__b

P_a___
___ver__
___les___te_
So__ o_ So___on
_s___h
J___mi__
La_e___ti__s
__ek___
Da__e_
H___a
___l
A__s
O_a___h

___ah
M___h
__hu_
H__a__uk
Z__h__ia_
H__g_i
Ze__a__a_
M__a__i



# The Old Testament

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | J | E | R | E | M | I | A | H | M | Y | | | L | R | O | N | U | M | B | E | R | S | |
| S | O | C | M | Z | H | P | R | O | V | E | R | B | S | U | A | F | W | A | P | X | O | L | M |
| J | B | C | D | R | O | V | K | L | Y | U | Z | Q | H | T | R | P | S | L | M | J | T | E | L |
| U | A | L | Y | A | S | R | Q | U | A | F | P | N | E | H | E | M | I | A | H | O | L | V | S |
| D | D | E | U | T | E | R | O | N | O | M | Y | D | S | A | R | O | G | C | X | N | S | I | G |
| G | I | S | A | I | A | H | T | M | D | Z | E | P | H | A | N | I | A | H | P | A | I | T | N |
| E | A | I | M | B | O | T | Y | N | I | E | L | N | A | T | S | M | Z | I | O | H | C | I | L |
| S | H | A | B | A | K | K | U | K | A | C | O | M | T | E | S | T | H | E | R | D | L | C | G |
| J | O | S | H | U | A | I | D | W | T | H | A | G | G | A | I | L | S | P | U | S | W | U | E |
| K | O | T | A | L | S | N | A | R | Q | A | U | H | D | L | T | J | T | J | S | L | I | S | N |
| G | L | E | R | M | B | G | N | E | U | R | T | M | A | L | I | I | G | H | R | A | P | A | E |
| I | P | S | L | J | U | S | I | K | M | I | F | E | R | C | H | R | O | N | I | C | L | E | S |
| E | X | O | D | U | S | E | E | T | L | A | N | X | A | L | V | S | E | N | R | K | W | M | I |
| D | E | Z | E | K | I | E | L | G | R | H | R | J | S | O | N | G | O | F | S | O | N | G | S |

GENESIS
EXODUS
LEVITICUS
NUMBERS
DEUTERONOMY
JOSHUA
JUDGES
RUTH
SAMUEL
KINGS
CHRONICLES
EZRA


NEHEMIAH
ESTHER
JOB
PSALMS
PROVERBS
ECCLESIASTES
SONG OF SONGS
ISAIAH
JEREMIAH
LAMENTATIONS
EZEKIEL
DANIEL

HOSEA
JOEL
AMOS
OBADIAH
JONAH
MICAH
NAHUM
HABAKKUK
ZEPHANIAH
HAGGAI
ZECHARIAH
MALACHI

Name : ..............................................................

WORD SEARCH

Name : ..............................................................................



## ACROSS

6 The Lord is my __

8 I will __ no evil for you are with me

10 Even though I walk through the valley of the __ of death

13 You __ my head with oil

14 Your rod and your staff, they __ me

## DOWN

1 Surely __ and mercy will follow me all the days of my life

2 And I will dwell in the house of the Lord __

3 He makes me lie down in green __

4 My __ overflows.

5 He guides me in paths of __ for his name's sake

7 You prepare a table before me in the presence of my __

9 He leads me beside quiet __

11 I shall not __

12 He restores my __

# MAY - 2025

| | |
|---|---|
| 01-MAY | Master. Joyson Stubert S/o Kingsly Stoobert |
| 01-MAY | Ms. Alen Maisie D/o Alvin Kumar Asirmanns |
| 02-MAY | Master. Gain S/o George Rose |
| 03-MAY | Mr. S. Ashok Kumar |
| 05-MAY | Mr. Appavoo Nicson Kennedy |
| 05-MAY | Mr. Stephen Pradeepkumar |
| 05-MAY | Mrs. Lavanya Kannan |
| 06-MAY | Ms. Shaana Liliya D/o Simeyon S |
| 06-MAY | Master. Meshvin Tano S/o Bervin Meshak S |
| 07-MAY | Rev. S.P Baskar |
| 08-MAY | Ms. Jesil Bernice D/o Herchil Harish |
| 08-MAY | Mr. K. Arunkumar |
| 09-MAY | Master. S. Yagan Leano S/o Selva Ezhil S |
| 10-MAY | Mrs. Beula Rani Livingston |
| 11-MAY | Mr. Rajesh ChellaDurai |
| 11-MAY | Mr. Jose Selva Kumar |
| 12-MAY | Mr. Suresh Babu |
| 12-MAY | Mr. Jerin |
| 13-MAY | Mr. Selvistor Solomon |
| 15-MAY | Mr. George Rose |
| 16-MAY | Mr. Selva Kumar |
| 16-MAY | Mrs. Nirmala Jenifer Paul |
| 17-MAY | Mrs. ArputhaMary Sandanam |

| | |
|---|---|
| 17-MAY | Master. B. Briston Isac S/o Berlin Jose |
| 18-MAY | Mr. R. Aruldhas |
| 18-MAY | Mrs. Shanthi Kristina Veni |
| 19-MAY | Mrs. Salini Vimala Kingsly |
| 19-MAY | Mr. T. Robert Wilson |
| 19-MAY | Mr. P. Vijinraj |
| 20-MAY | Mr. B. Pushparaj |
| 20-MAY | Ms. Felicia Leenus Obed D/o Leenus Patrick Obed |
| 21-MAY | Mrs. Indira Israel |
| 22-MAY | Mrs. Iswarya Obed |
| 22-MAY | Master. J.S Iniyan Immanuel S/o Stephen Chellaraj J |
| 23-MAY | Mr. C. Havin Heba |
| 26-MAY | Ms. J.H Juana D/o Jayan Dharmaraj |
| 27-MAY | Ms. Avisha D/o Ebenesar Sahayan Samuel |
| 28-MAY | Mr. Suresh Rajan |
| 28-MAY | Mr. M. Antony Ajin |
| 29-MAY | Ms. J.V Kerenhappuch Abiah D/o Jeyakumar |
| 29-MAY | Ms. Rishita Kannan D/o Kannan A.S |
| 29-MAY | Master. Advik Bryan S/o Arun Kumar V |
| 30-MAY | Ms. Aashika Arun Kumar D/o Arun Kumar V |

*"For through wisdom your days will be many, and years will be added to your life."*

Proverbs 9:11



# MAY Wedding ANNIVERSARY

**03- MAY**
Mr. Ashok Jayakumar Hanly Paul
&
Mrs. Blessy P

**04-MAY**
Mr. Lawrence Gambeeram
&
Mrs. Augusta Lawrence

**07-MAY**
Mr. Rahul Kumar Jaiswal
&
Mrs. Jancy Rani

**09- MAY**
Mr. S. Bervin Meshak
&
Mrs. Ann Rubalin

**13-MAY**
Mr. John Joseph
&
Mrs. Jessy Beula John Joseph

**19- MAY**
Mr. Jose Selva Kumar
&
Mrs. Rena Ivelet Jasmine

**03-MAY**
Mr. Enock Prabhakaran
&
Mrs. Annie Pamila

**06-MAY**
Mr. R. Aruldhas
&
Mrs. Prasana

**08-MAY**
Mr. Thanu Lingam
&
Mrs. R. Preeda Nancy

**12-MAY**
Mr. Selva Kumar
&
Mrs. Radhika Grace Selva Kumar

**16-MAY**
Mr. S. Simeyon
&
Mrs. J.N Basil Shallu



# MAY *Wedding* ANNIVERSARY

**25-MAY** Mr. Antony Jesu Rajan & Mrs. Jamuna Rani

**26-MAY** Mr. Y. Mesiah Das & Mrs. Suja Jasmine Mesiah D

**29- MAY** Mr. Thangaraj Daniel & Mrs. Mercy Rajam

**25-MAY** Mr. David Sornabalan & Mrs. Yesubai

**25-MAY** Mr. P. Vijinraj & Mrs. J.P Pamela Jennifer

**26-MAY** Mr. Rajesh ChellaDurai & Mrs. Shalini

**31-MAY** Dr. Livingston Samuel & Mrs. Segena Livingston

*"Two are better than one, because they have a good return for their labor: If either of them falls down, one can help the other up."*

Ecclesiastes 4:9–10


Check Tx's input signal






# 17TH CHURCH DAY




EDITOR
THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348
Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY

# The Lord has done great things for us

*and we are filled with joy*

PSALM 126:3